# DEPOSITION OF WITNESS

**Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of Judicial Magistrate No. II, Madurai**

**Case No. C.C - 455/2022**

**Deposition of Witness for Prosecution : P.W. 1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | **ராமகிருஷ்ணன்** | Caste | : | |
| Father/Husband Name | : | **மதுரைவீரன்** | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

**(A2, A3, A4 present. Other Accused Absent. Petition filed and Allowed)**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1969 of the day of 23.10.2024**

**முதல் விசாரணை**

ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். மதுரை மாவட்டம் பேரையூர் தாலுக்கா உத்தப்புரத்தில் ஸ்ரீ வெற்றி விநாயகர் இருசக்கர வாகன ஒர்க் ஷாப்பை 2வது எதிரி ஒய்யனன் என்பவரிடம் 5 வருட ஒத்திக்கு எடுத்து நடத்தி வந்தேன். கடந்த 21.01.2019 ஆம் தேதியில் நானும் மேற்படி ஒய்னனும் மேற்படி ஒர்க் ஷாப்பிற்காக ஏற்படுத்தி கொண்ட 5 வருட பதிவு செய்யப்படாத ஒத்தி பத்திரம் **(ம.சா.ஆ. 1, எதிரி தரப்பில் ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது).** என் அப்பாவிற்கு சொந்தமான இடத்திற்கு பாதை பிரச்சனை என் அப்பாவிற்கும், எதிரி ஒய்யனன் மற்றும் எதிரி செல்வம் ஆகியோர்கள் இடையே நடந்தது. இது சம்பந்தமாக பேரையூர் நீதிமன்றததில் வழக்கு நடந்து எங்களுக்கு சாதகமாக தீர்ப்பானது. மேற்படி வழக்கில் எங்கள் சார்பாக பிறப்பிக்கப்பட்ட இடைக்கால உருத்துக்கட்டளையின் நகல் **(ம.சா.ஆ.**

**2, எதிரி தரப்பில் ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது).** 22.09.2019 ஆம் தேதி மதியம் 02.00 மணியளவில் எதிரிகளசெல்வம், ஒய்யனன், திருப்பதி, மாரிமுத்து, தவமணி, பொம்மி, பூங்கொடி, வென்னிலா, ரதிபாப்பா, முருகேசன் ஆகியோர்கள் என் கடையை அடித்து உடைத்தும், கடையில் வைத்திருந்த ரூபாய் 9,000/– திருடி விட்டார்கள். ரூபாய் 20,000/– மதிப்புள்ள பொருட்களை தீ வைத்து சேதப்படுத்தியுள்ளார்கள். மொத்த கடையையும் கொள்ளை அடித்து சென்றுவிட்டார்கள். மேற்படி சம்பவம் நடக்கும்போது நான் சம்பவ இடத்தில் இல்லை. எனது தாயார் எனது அலைப்பேசியின் மூலம் மேற்படி சேதம் அடைந்த என் கடையை புகைப்படம் எடுத்தார். அந்த புகைப்படத்துடன் கூடிய குறுத்தகடு **(ம.சா.ஆ. 3, எதிரி தரப்பில் ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது).** அதற்கான இந்திய சாட்சிய சட்டப்பிரிவு 65–B க்கான சான்றிதழ் **(ம.சா.ஆ. 4, எதிரி தரப்பில் ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது).** மேலும் மேற்படி சம்பவத்தை எனது அலைப்பேசியில் வீடியோவாக எனது தாயார் எடுத்துள்ளார். அந்த வீடியோவை பென்டிரைவ்–ஆக தாக்கல் செய்கிறேன். அது **(ம.சா.ஆ. 5, எதிரி தரப்பில் ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது).** அதற்கான இந்திய சாட்சிய சட்டப்பிரிவு 65–B க்கான சான்றிதழ் **(ம.சா.ஆ. 6, எதிரி தரப்பில் ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது).** மேற்படி எனது கடைக்காக நான் வாங்கிய பொருட்களின் Invoice அசல் **(ம.சா.ஆ. 7)** குறியீடு செய்யப்படுகிறது. எனது கடையில் கொள்ளையடித்த பொருட்களை TN 59 CZ 4903 என்ற TATA Ace வாகனத்தை எடுத்து சென்றுவிட்டார்கள். இது சம்பந்தமாக 26.09.2019 ஆம தேதியில் எழுமலை காவல் நிலையத்தில் நேரிலும் தபால் மூலமும் புகார் கொடுத்தேன். அந்த புகார் **(ம.சா.ஆ. 8)** குறியீடு

செய்யப்படுகிறது. நடவடிக்கை எடுக்காததால் மாவட்ட கண்காணிப்பாளிடம் புகார் கொடுத்தேன். அந்த புகார் **(ம.சா.ஆ. 9)** குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் நீதிமன்றத்தில் எதிரிகள் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய மனு தாக்கல் செய்து, நீதிமன்ற உத்தரவு பெற்று எதிரிகள் மீது எழுமலை காவல் நிலையத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது. மேற்படி நீதிமன்ற உத்தரவு **(ம.சா.ஆ. 10)** குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி முதல் தகவல் அறிக்கை **(ம.சா.ஆ. 11)** குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் போலீசார் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்ய காலதாமதம் ஆனதால் மதுரை உயர்நீதிமன்றத்தில் மனு செய்து குற்ற இறுதியறிக்கையை தாக்கல் செய்ய உத்தரவு பெற்றேன். மேற்படி உத்தரவின் நகல் **(ம.சா.ஆ. 12)** குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி உயர்நீதிமன்ற உத்தரவை எழுமலை போலீசார் செயல்படுத்தாததால் மேற்படி எழுமலை காவல் ஆய்வாளர் அவர்களுக்கு நீதிமன்ற அவமதிப்பு அறிவிப்பு அனுப்பினேன். மேற்படி அறிவிப்பு **(ம.சா.ஆ. 13)** குறியீடு செய்யப்படுகிறது. அதற்கு பின்னர் எழுமலை போலீசார் மேற்படி வழக்கை முடித்துவைத்து Mistake of fact என்று குற்ற இறுதியறிக்கையை தாக்கல் செய்து எனக்கு நீதிமன்றத்திலிருந்து அறிவிப்பு வந்தது. அந்த குற்ற இறுதியறிக்கை **(ம.சா.ஆ. 14)** குறியீடு செய்யப்படுகிறது. அந்த அறிவிப்பு **(ம.சா.ஆ. 15)** குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் நான் நீதிமன்றத்தில் ஆஜராகி மேற்படி இறுதியறிக்கையை எதிர்த்து மனு தாக்கல் செய்தேன். அந்த மனுவின் அடிப்படையிலும், என்னுடைய சாட்சியத்தின் அடிப்படையிலும் இந்த வழக்கு கோப்புக்கு எடுக்கப்பட்டது. என்னுடைய கடையில் சேதப்படுத்திய பொருட்களின் மதிப்பு 2,80,000/- ஆகும். எதிரிகள்

மீது தக்க நடவடிக்கை எடுத்து தண்டனை பெற்றுதருமாறு தாழ்மையுடன் கேட்டுகொள்கிறேன்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

**1வது எதிரி எனது அம்மாவை பெற்ற தகப்பனார் எனக்கு தாத்தா முறை ஆவார் என்றால் சரிதான். மற்ற எதிரிகள் எனது தாய் மாமன், அவர்களின் மனைவி மற்றும் குழந்தைகள் என்றால் சரிதான். நான் 10 ஆம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனது சகோதரர் கோவை நீதிமன்றத்தில் வழக்கறிஞராக பணியாற்றி வருகிறார். எனது தம்பி ஜெயராமன் நீதிமன்ற ஊழியராக பணியாற்றுகிறார். நான் ஒர்க்ஷாப் நடத்தி வந்த கடையின் உரிமையாளர் 1வது எதிரி என்றால் அது அவரின் பூர்வீக சொத்து. அந்த கடையை சுற்றி கடைகள் உள்ளது என்றால் சரிதான். ஒத்தி பத்திரம் எழுதும்போது எங்களுக்கும் எதிரிகளுக்கும் எந்த பிரச்சனையும் இலிலை என்றால் சரிதான். மேற்படி ம.சா.ஆ. 1 பத்திரம் 50ரூபாய் பத்திரத்தில் எழுதப்பட்டுள்ளது. அது எனது பெயரில் வாங்கப்பட்டுள்ளது. மேற்படி பத்திரத்தில் சாட்சிகளாக எனது அம்மா மற்றும் வாசிமலை என்பவர் கையெழுத்து போட்டுள்ளார்கள். சாட்சிகளின் பேருக்கு கீழே விலாசம் மற்றும் தகப்பனார் பெயர் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். சொத்து சம்பந்தமாக 100 ரூபாய்க்கு மேல் எந்த ஆவணமும் எழுதினாலும் பதிவு சட்டத்தின்படி சார்பு பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யவேண்டும் என்றால் சரிதான். மேற்படி கடை ஒத்திக்கு எடுத்த விபரம் எனது அண்ணன் அழகுமணிக்கு தெரியும் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பணம் மேற்படி ஒத்திக்கு எனது அம்மாதான் கொடுத்தார் என்றால் சரிதான். எல்லார் முன்னிலையிலும் கொடுத்தார். 1வது எதிரியிடம் நான் பேரன் என்ற முறையில் எனக்கு வங்கியில் கடன் வாங்க வேண்டியுள்ளதாகவும் அதற்காக Surety கையெழுத்து போடவேண்டும் என்று எழுதாத 50 ரூபாய் பத்திரத்தில் 1வது எதிரியை ஏமாற்றி கையெழுத்து வாங்கி இந்த போலியான ஒத்தி பத்திரத்தை தயார் செய்துள்ளேன் என்றால்**

சரியல்ல. அது போலி பத்திரம் என்பதால்தான் நான் பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல. நடைபாதை இடம் 1வது எதிரிக்கு பாத்தியப்பட்ட இடம் என்றால் சரிதான். அதற்கு அருகில் எங்களுக்கு பூர்வீக சொத்து உள்ளது என்றால் சரிதான். மேற்படி இடத்திற்கு செல்லதான் எதிரிகளிடம் பாதை கேட்டோம் என்றால் சரியல்ல. மேற்படி ஒர்க் ஷாப் தற்பொழுது எதிரிகளின் அனுபவத்தில் உள்ளது என்றால் சரிதான். பேரையூர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த வழக்கின் விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அந்த வழக்கில் நான் வாதியா என்றால் இல்லை, எனது அப்பா அந்த வழக்கில் வாதி ஆவார். சம்பவ இடத்திலிருந்து எடுமலை காவல் நிலையம் 2 கி,மீ தூரம் இருக்கும். சம்பவ நடந்து 4 நாட்கள் கழித்து நான் புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள மனுவில் காவல் நிலையத்தில் புகார் கொடுக்க 4 நாட்கள் காலதாமதத்திற்கான காரணத்தை சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். ம.சா.ஆ. 8 புகாரின் உள்ள கையெழுத்து என்னுடையது இல்லை என்றால் சரியல்ல. மேற்படி ம.சா.ஆ. 9 ஆவணத்தில் உள்ள ஒப்புதல் அட்டையின் அசல் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. என்னுடைய தனிநபர் புகாரில் எதிரிகள் யார் யார் வந்தார்கள், யார் யார் கையில் என்ன ஆயுதம் இருந்தது என்றும், யார் கடையை உடைத்தார் என்றும், யார் தீயை வைத்தார்கள் என்றும், இருசக்கர வாகனத்தை சேதப்படுத்தியது யார் என்றும், கடையில் இருந்த பணத்தை எடுத்து சென்றவர் யார் என்றும், கடையில் இருந்த பொருட்களை TATA Ace வாகனத்தில் எடுத்து சென்றவர் யார் என்றும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சொல்லியுள்ளேன். சம்பவத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். எனது வீட்டிற்கு ஒர்க் ஷாப்பிற்கும் 50 மீ தூரம் இருக்கும். சம்பவத்தை பற்றி எனது தாயார் மற்றும் சரவணபாண்டியன் ஆகியோர்கள் இருந்தார்கள். இது சம்பந்தமாக நான் கொடுத்த புகாரின் மீது எழுமலை காவல் நிலைய குற்ற எண் 252/2019 ஆக வழக்கு பதிவு செய்யப்பட்டு, இந்நீதிமன்றத்தில் சிசி 74/2020 ஆக வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரியல்ல.

சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் அதே தேதியில் நான் எனது அண்ணன் அழகுமணி தாயார் பாண்டிம்மாள் எனது தகப்பனார் மதுரைவீரன் எனது தம்பி ஜெயராமன் எதிரிகளை தாக்கியதாக எங்கள் மீது மேற்படி காவல் நிலையத்தில் இதச பிரிவு 323,324, 506(ii), 294(b) IPC and Sec. 4 of TNPHW Act ஆக வழக்கு பதிவு செய்யப்பட்டு நீதிமன்றத்தில் சிசி 135/2020 ஆக வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். அதேபோல் சிசி 182/2023 என்ற வழக்கும் நான் எனது அண்ணன் எனது பெரியப்பா முனியன் ஆகியோர் மீது இதச பிரிவு 147, 148, 323, 324, 506(ii) ஆக வழக்கு பதிவு செய்யப்பட்டு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். நாங்கள் அனைவரும் சேர்ந்து எதிரிகளை அடித்து காயப்படுத்திவிட்டு அதிலிருந்து தப்பிப்பதற்காக எனது கடையை அடித்து கொள்ளை அடித்து விட்டதாக எதிரிகள் மீது பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. ம.சா.ஆ. 5 Pendrive–ல் உள்ள வீடியோ தொழில் தெரிந்த நபரால் எடுக்கபடவில்லை என்றாலும் மேலும் இவ்வழக்கிற்காக மோசடியாக உருவாக்கப்பட்டது என்றாலும் சரியல்ல. மேற்படி தாக்கல் செய்த போட்டோ கடைக்கு அருகே தார் ரோடு உள்ளது என்றாலும், ஒரு புகைப்படத்தில் இருசக்கர வாகனம் புல்தரையில் விழுந்துகிடப்பதாக உள்ளது என்றால் சரியல்ல. மேற்படி ஆவணம் புகைப்பட நிபுணரால் எடுக்கப்படவில்லை என்றாலும் வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டது என்றாலும் மேற்படி புகைப்படம் மற்றும் பென்டிரைவ் இந்திய சாட்சி சட்டத்தின்படி செல்லதக்கது அல்ல என்றால் சரியல்ல. மேற்படி நான் தாக்கல் செய்யப்பட்டுள்ள பொருட்களின் Invoice கோயம்புத்தூரில் வாங்கியுள்ளது என்றால் சரிதான். எனது அண்ணன் கோயம்புத்தூரில் வழக்கறிஞராக பணிபுரிந்து வருவதால் மேற்படி ஆவணம் வழக்கிற்காக எங்களால் தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் ம.சா.ஆ. 5 புகார் ஆவணம் மற்றும் அஞ்சலக ஒப்புதல் அட்டையின் நகல்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றாலும் அது செல்லதக்கதல்ல என்றாலும் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் ம.சா.ஆ. 15ஐ தவிர நகல்கள் என்றால் சரியல்ல. ஆவணங்களின் அசல் என்னிடம் உள்ளதா என்றால் நான் தாக்கல்

செய்துள்ளேன். நான் பொருட்கள் வாங்கிய கடைகாரரை விசாரிக்க தயாரா என்றால் இல்லை. நான் இதே சம்பவம் தொடர்பாக ஏற்கனவே புகார் கொடுத்து வழக்கு பதிவு செய்யப்பட்டு சிசி 74/2020 ஆக வழக்கு பதிவு செய்யப்பட்டதை மறைத்து பொய்யாக சங்கதிகளை சொல்லி, என் புகாரின் மீது நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று தனிபுகார் கொடுத்து நீதிமன்றத்தை ஏமாற்றியுள்ளேன் என்றால் சரியல்ல. ஒரே குற்றத்திற்கு இரண்டு வழக்குகள் தாக்கல் செய்ய முடியாது என்றாலும், அது அரசியல் சாசன சட்டத்திற்கு எதிரானது என்றால் சரிதான். நாங்கள் குற்ற பிண்ணனி உள்ளவர்கள் என்றாலும், நாங்கள் எதிரிகளை அடித்து காயப்படுத்திவிட்டு, இதை மறைத்து எதிரிகள் மீது பொய் புகார் கொடுத்து இந்த பொய் வழக்கை தாக்கல் செய்துள்ளதால், இவ்வழக்கு நிலைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல.